DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.75/2025**
Prosecution Witness P.W.**20**

| | |
|---|---|
| Name: **திருமதி.பாண்டியம்மாள்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் A2, A4 ஆஜரில்லை அவர்களுக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.
மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 07.07.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், தாண்டிக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2024ம் தேதியன்று கண்டமனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருக்கும் போது அதே ஊரைச் சேர்ந்த செல்வராஜ் மனைவி நதியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.178/2024, பிரிவு 103(1) BNS ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.26, புகார் மனுவினையும், அச்சு முதல் தகவல் அறிக்கையும் விசாரணைக்காக ராஜதானி வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அச்சு முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான், நான் காவல் ஆய்வாளர் அவர்களால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. கண்டமனூர் காவல் நிலையத்திற்கும், ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே

எவ்வளவு தூரம் உள்ளதென்று சொன்னால் சுமார் 16 கி.மீ. உள்ளது. அச்சு முதல் தகவல் அறிக்கை காலம் 15ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் காலதாமதத்துடன் அனுப்பப்பட்டதால் தான் அதுபற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

2. அ.சா.1 நதியா காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாகத்தான் புகார் கொடுத்தார். அ.சா.1 நதியா காவல் நிலையத்தில் ஆஜராகி என்னிடம் வாய்மொழியாகத்தான் புகார் கொடுத்தார் என்றும், அதனை மறைத்து நான் கைப்பட எழுதிய புகாரைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்த புகாரானது பின்னிட்டு வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டதென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.07 18:52:07 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.